மாமுனிகள் வைபவம்

ஸ்ரீ உ. வே. ஸம்பத்குமாராசார்யர், பேராசிரியர், விவேகானந்தர் கல்லூரி, மயிலை

நம்முடைய ஸ்ரீவைஷ்ணவ ஸம்ப்ரதாயத்தில் பல ஆசார்யர்கள் விளங்கினாலும் மூவர் முக்யமாகக் கொள்ளப்படுகின்றனர்; அவர்களாகிறார் "ஆமுதல்வன்" என்னும்படி அவதார விசேஷமாயிருந்துள்ள வ்யக்தி விசேஷங்கள்—'முகில் வண்ணனடியை யடைந்துய்ந்த' நம்மாழ்வாரும், அந்த 'மாறனடிபணிந்துய்ந்த' நம்பிராமாநுசனும், அவர் திருவடிகளிலே அநந்யசரணரான நம் மாமுனிகளும். அதனால்தான் ஸ்ரீவைஷ்ணவ உலகம் "ஆழ்வார் திருவடிகளே சரணம், எம்பெருமானார் திருவடிகளே சரணம், ஜீயர் திருவடிகளே சரணம்" என்று நிச்சலும் அனுஸந்தித்து வருகிறது. நம்மாழ்வாருடைய பெருமையைக் காட்டிலும் எம்பெருமானாருடைய பெருமை சிறந்தது. இவ்விருவருடைய பெருமைகளைக் காட்டிலும் மாமுனிகளுடைய பெருமை மிகச் சிறந்தது ஆகும். எம்பெருமான் கைவிட்டவர்களையும் திருத்தியவர் நம்மாழ்வார். ஓராண் வழியாகப் பூருவர்கள் உபதேசித்துப் போந்த நியமத்தைக் குலைத்துப் பலரையும் உபதேசிக்கும்படி பண்ணி, பலகால் திருக்கோட்டியூர் நம்பி பக்கல் கேட்ட பரமார்த்தத்தை இலக்காக வைத்து உபதேசித்தவர் எம்பெருமானார். பூர்வாசார்ய பரம்பராப்ராப்தமான அர்த்த விசேஷங்களை எல்லாரும் அறிந்து உஜ்ஜீவிக்க வேண்டும் என்று பரம காருணிகரான பிள்ளைலோகாசார்யர் அருளிச்செய்த மூன்று ரஹஸ்யங்களுக்கு மட்டுமே தேனும் பாலும் கன்னலும் அமுதுமாகிய வ்யாக்யானங்களை அருளிச்செய்தவர் நம் மாமுனிகள். ஆதலால் தான் இவ்விருவர் பெருமையிலும் மாமுனிகளின் மேன்மை மேம்பட்டதாகும். மாமுனிகளிடத்தில் ஆசார்ய பதவியை அலங்கரிப்பதற்கு ஏற்ற நற்குணங்கள் அனைத்தும் குடிகொண்டிருந்தன என்றால், இது இறையும் அதிசயோக்தியாகாது.

இவர் ஆழ்வார் திருநகரியிலே திருவவதரித்தார். இவருடைய திருத்தந்தையார் திருநாவீறுடைய பிரான் தாஸர் அண்ணர். கலியுகத்தில் நாலாயிரத்து நூற்றெழுபத்திரண்டாவதாய், சக வருஷத்தில் ஆயிரத்து இரு நூற்றுத் தொண்ணூற்று இரண்டாவதான ஸாதாரண வருஷத்தில் ஐப்பசி மாதத்தில் இருபத்தாறாவது நாளில் சுக்லபக்ஷத்தில் வியாழக்கிழமை சதுர்த்தி கூடின மூல நக்ஷத்திரத்தில் அவதரித்தார்.

ப்ரதிவாதி பயங்கரம் அண்ணாவும், எறும்பியப்பாவும் இவ்விஷயத்தை "யதிவரண மூலம் முக்தி மூலம் ப்ரஜாநாம் சடரிபு முநித்ருஷ்டாம்நாய ஸாம்ராஜ்ய மூலம் கலிகலுஷ ஸமூலோந்மூலநே மூலமிந்தே ஸ பவது வரயோகி நஸ்ஸமஸ்தார்த்த மூலம்" (ச்லோகம் 2) என்றும்,

"யந்மூலமாச்வயுஜமாஸ்யவதார மூலம்
காந்தோபயந்த்ரு யமிந: கருணைக ஸிந்தோ:
ஆஸீத ஸத்ஸ்வ குணிதஸ்ய மமாபி ஸத்தா
மூலம் ததேவ ஜகதப்யுதயைக மூலம்"

(ச்லோ. 100) என்றும் தாம்தாம் அருளிய வரவரமுநி சதகம் தன்னில் அருளிச்செய்தார்கள்.

இவர் ஆதிசேஷனுடைய அம்சமாகவும் எம்பெருமானாருடைய அபராவதாரமாகவும் அவதரித்தவர் என்னுமதை

அப்பிள்ளார் "ஆதியிலே யரவரசை யமைத்தரங்கர் அவனியிலே யிருநூறுன் டிருநீரென்ன, பாதியிலே உடையவராய் வந்து தோன்றிப் பரமபதம் நாடியவர் போவே னென்ன, நீதியாய் முன்போல நிற்க நாடி நிலுவைதனை நிறைவேற்றி வாருமென்னச் சாதாரண மெனுமாம் வருடந்தன்னில் தனித்துலா மூலநாள் தான் வந்தாரே" என்று அருளிச்செய்கிறுர். மைசூர் அனந்தாழ்வான் ஸ்வாமியும்.

"சேஷ: ஸ்ரீமாந் நிகம மகுடயுக்ம ரக்ஷாப் ரவருத்த:
ஸ்ரீமத் ராமாவரஜ முநிதாம் ஸௌம்ய ஜாமாத்ருதாஞ்ச
விந்தந் த்ருப்யத் விமதபடலீ பாடநோத் தாம ஸூக்தி:
பூயாத் பவ்ய ப்ரதித மஹிமா ச்ரேயஸே பூயஸே ந:
என்று அருளிச்செய்தது காணவேணும்.

இவருக்குப் பெற்றோர்களிட்ட திருநாமம் அழகிய மணவாளன் என்பதாகும். இவர் 'திருவாய்மொழிப்பிள்ளை' திருவடிகளிலே ஆச்ரயித்து "தேவுமற்றறியேன்" என்னும்படி இருந்து அவருபதேசத்தாலே திருவாய்மொழி தொடக்கமான எல்லா திவ்ய ப்ரபந்தங்களினுடையவும் அவற்றின் தாத்பர்யமான எல்லா ரஹஸ்யங்களினுடையவும் அர்த்தத்தைக் கற்றார். "நம்முடைய குரு பரம்பரையாகிற ஹாரத்துக்கு நடுநாயக ரத்னம்போல் விளங்கும் உடையவர் திருவடிகளையே உமக்குத் துணையாகப் பெற்றிடும்" என்று பிள்ளை காட்டிக்கொடுக்க, மாமுனிகளும் உடையவர் திருவடிகளிலே அதிப்ராவண்யத்தை யுடையவரா யிருந்தபடியால் "யதீந்த்ர ப்ரவணர்" என்னும் திருநாமத்தைப் பெற்றார்.

நம்முடைய பூர்வாசார்யர்கள் அனைவரும் "தென்னாடும் வடநாடும் தொழ நின்ற திருவரங்கம்" திருப்பதியையே இருப்பிடமாகக் கொண்டு தர்சக நிர்வாஹம் பண்ணிப் போந்தவர்களாதலால் இவரும் அங்கே எழுந்தருளி அழகிய மணவாளனுடைய பரம க்ருபைக்குப் பாத்ரமானார். ப்ரதமாசார்யரான பெரிய பெருமாள் சரமாசார்யரான பெரிய ஜீயரை ஆசார்யனாகக் கொண்ட பெருமை மற்ற ஆசார்யர்களுக்கு இல்லாததொன்றாகும். ஆசார்யத்வ பூர்த்தி இவரிடத்தில் இருந்தமையால் தான் இவரை ஆசார்யனாகக் கருதினான் பெரிய பெருமாள். இவ்விஷயத்தைச் சற்று விவரிக்கிறேன்.

சாஸ்திரங்களில் ஆசார்ய லக்ஷணம் இவ்விதம் கூறப்பட்டிருக்கிறது. "ஆசினோதி ஹி சாஸ்த்ரார்த்தாந் ஆசாரே ஸ்தாபயத்யபி, ஸ்வயம் ஆசரதேயஸ்து ஆசார்யஸ்ஸோபிதீயதே" என்ற ப்ரமாணத்தின்படி ஞானம் அனுட்டானம் இவை இருக்கவேண்டும்; வாக்வன்மை இருக்கவேண்டும். இவைதான் ஆசார்யனுக்கு லக்ஷணம். ஸ்ரீவசனபூஷணத்தில் ஆசார்யனுக்கு இந்த சாஸ்த்ர மர்யாதையிலே லக்ஷணம் சொல்லப்பட்டிருப்பினும் தனியாக ஒரு லக்ஷணத்தைப் பரம காருணிகரான பிள்ளைலோகாசாரியர் ஒரு ஸூத்ரத்தில் தெரிவிக்கிறார்: "நேரே ஆசார்யன் என்பது ஸம்ஸார நிவர்த்தகமான பெரிய திருமந்த்ரத்தை உபதேசித்தவனே" என்பது 315-வது ஸூத்ரம். பகவந் மந்த்ரங்கள் அநேகம். எப்படி பகவானுடைய குணங்கள் எண்ணிறந்தவையோ பெயர்கள் எண்ணிறந்தவையோ அப்படியே மந்த்ரங்களும் எண்ணிறந்தவை. மற்றை மந்திரங்கள் ஸம்ஸாரத்தைத் தாண்டச் செய்யாதவை. ஸம்ஸாரத்தை வளர்க்க உதவி செய்பவை. அவை பெருமையற்றவையாயும் க்ஷுத்ரங்களுமாயு மிருக்கும். இந்த மந்த்ரங்களை உபதேசித்தவனுக்கு ஆசார்யத்வ பூர்த்தி கிடையாது. ஆசார்யன் யார் என்றால்

ஸம்ஸார நிவர்த்தகமான பெரிய திருமந்த்ரத்தை உபதேசித்தவனைத்தான். மந்த்ரம் என்னுமலும், திருமந்த்ரம் என்னுமலும், பெரிய திருமந்த்ரம் என்கை. எல்லாப் பயன்களையும் இம்மந்திரம் கொடுத்தாலும் மற்றைப் பலன்களில் நோக்கு இல்லாமல் மோக்ஷமாகிற பலத்திலே நோக்குடையதாயிருக்கும். வேதாந்தங்கள் எல்லாவற்றினுடைய கருத்துப் பொருள்: பிறவிப் பெருங்கடலைக் கடக்கச் செய்வது. மீண்டும் பிறப்பதற்கு விரும்பாத மக்களுக்குப் புகலிடம் இந்தப் பெரிய திருமந்த்ரம். ஆதலால்தான் இந்த மூலமந்த்ரமானது "மந்த்ராணும் பரமோ மந்த்ர: குஹ்யாநாம் குஹ்யமுத்தமம்| பவித்ரம்ச பவித்ராணும் மூலமந்த்ரஸ்ஸநாதந:||" என்றது பாஞ்சராத்ரம். இம்மந்த்ரத்தை உபதேசித்தவனைத்தான் ஆசார்யன் என்று சொல்லவேணும்.

பெரிய திருமந்த்ரத்தை உபதேசிப்பதோடு மட்டுமன்றி அதன் விவரணமான த்வயம் சரமச்லோகம் இவற்றையும் உபதேசித்தவன் ஆசார்யனவன். திருமந்த்ரத்தின் நடுப்பதமான 'நம: என்பதன் விவரணம் த்வயத்தின் பூர்வவாக்யம். திருமந்த்ரத்தின் கடைசிப் பதமான "நாராயணாய" என்பதன் விவரணம் த்வயத்தின் உத்தரவாக்யம். சரமச்லோகத்தின் பூர்வார்த்தம் த்வயத்தின் முன் வாக்கியத்தின் விவரணம். சரமச்லோகத்தின் பின்பாதி த்வயத்தின் உத்தரார்த்த விவரணம். ஆக த்வயம், சரமச்லோகம் என்ற மற்ற இரண்டு ரஹஸ்யங்களும் ப்ரதம ரஹஸ்யமான திருமந்த்ரத்தோடு வேறாக இல்லாதிருத்தலால் திருமந்த்ரத்தைச் சொல்லவே மற்றவற்றின் உபதேசமும் தன்னடையே சொல்லியதாகத் தேறும். இதனைத் திருவுள்ளம் பற்றித்தான் பெரிய திருமந்திரத்தை உபதேசித்தவனை என்றார் பிள்ளைலோகாசார்யர். ஆகையால் இது ரஹஸ்ய த்ரய உபதேசத்துக்கும் உபலக்ஷணம்.

திவ்ய ப்ரபந்தங்கள் எல்லாமே அதன் விவரணம்தான். ஆழ்வார்களில் தலைவரான நம்மாழ்வார் அருளிச்செய்த ப்ரபந்தங்கள் நான்கு. அவற்றில் சரம ப்ரபந்தம் திருவாய்மொழி. அது த்வயத்தின் விவரணம். "த்வயார்த்தம் தீர்க்க சரணுகதி என்கிறது ஸாரஸங்க்ரஹத்திலே" என்கிறார் பிள்ளைலோகாசார்யர். திருவாய்மொழிக்கு ஒப்பானதாய் வேறொன்று ஒப்பில்லாததான வ்யாக்யானமான ஈட்டை மாமுனிகளைக்கொண்டு ஓதிப் பெருமாள் திருச்செவிசாத்தினன். இத் திருவாய்மொழியின் அர்த்தத்தைப் பெரிய பெருமாள் மாமுனிகளிடத்து மட்டும் கேட்கக் காரணம் அவர் தம்மை நீசனுகச் சொல்லிக் கொண்டபடியால்தான். பின்னும் "பிறர் மினுக்கம் பொறுமையில்லாப் பெருமையும் பெற்றோமே" என்று தம்மைத் தாமே கூறிக்கொண்டார். இது அவருடைய விபவ தசையில்; அர்ச்சையிலும் அப்படியே. அவருடைய (திருவுருவம்) அர்ச்சா விக்ரஹம் ஆழ்வார் திருநகரியில், நின்ற திருக்கோலத்தோடும், திருவரங்கத்தில் வீற்றிருந்த திருக்கோலத்தோடும் நம் போன்றவர்களால் ஸேவிக்கப்படுகின்றன. "ஆழ்வாரைக் காட்டிலும் நமக்கு என்ன சிறப்பு, ஏற்றம்" என்று எண்ணித் தம்முடைய விக்ரஹத்தைச் சிறிதாக்கிக் கொண்டார் ஆழ்வார்திருநகரியில்; திருவரங்கத்திலோ "எம்பெருமானுர் நல்லாட்சி செய்து பெருமைப்பட்டவர். அவரைக் காட்டிலும் நமக்கு என்ன பெருமை" என்று எண்ணி, அடியார்கள் ப்ரார்த்தனைப்படி, பெரிய திருவுருவம் ஏறியருளப் பண்ணக்கூடாது என்று சிறிதாக்கிக் கொண்டார். "ஆழ்வாரே தம்மை நீசனுகச் சொல்லிக் கொண்டாரே! ("நீசனேன் நிறைவு ஒன்றுமிலேன்") ஆகையால் நாம்

எம்மாத்திரம்" என்று தம்மை நீசனுகச் சொல்லிக்கொண்டபடியாலதான் பெரிய பெருமாள் இவரை ஆசார்யனுக வரித்தான். த்வய விவரணமான திருவாய் மொழியின் வ்யாக்யானங்களை ஆருயிரப் படி, ஒன்பதினுயிரப்படி, பன்னீராயிரப் படி, இருபத்துநாலாயிரப்படி. மூப்பத் தாருயிரப்படி இவற்றுடன் விசதமாக உபந்யஸித்தார். அதுகேட்டு எம்பெரு மானும் இவருடைய வாக்வைபவத்தைக் கொண்டாடி இவருக்குத் தலையான ஸ்ரீசைலேசதனியனை ஸமர்ப்பித்தான்.

ராமாவதார காலத்தில் ராமனுகிய பெருமாள் திருவடியின் (ஹநுமானின்) வாக்வைபவத்தைக் கொண்டாடினுன் "நாந்ருக்வேத விநீதஸ்ய நாயஜுர்வேத தாரிண: நாஸாமவேதவிதுஷ: சக்யமேவம் ப்ரபாஷிதும்" என்று வால்மிகி கூறு கிருர். கம்பரும்

இல்லாத உலகத்து எங்கும் இங்கு
இவன் இசைகள் கூரக்
கல்லாத கலையும் வேதக்கடலுமே
என்னும் காட்சி
சொல்லாலே தோன்றிற் றன்றே
ஆர்கொலிச் சொல்லின் செல்வன்,
வில்லார் தோள் இளையவீர! விரிஞ்
சனே! விடைவலானே!

என்று பாசுரம் பாடினுர்.

எப்படிப் பெருமாள் திருவடியினுடைய வாக் வைபவத்தைக் கொண்டாடினுரோ அதுபோலவே ஆசார்யச்ரேஷ்டரான மாமுனிகளின் வாக் வைபவத்தைக் கேட்டுப் பெருமாளுக்கும் பெருமாளான பெரிய பெருமாள் கொண்டாடி விசதவாக் சிகாமணி என்ற பிருதையும் ஸன்மானித்தான்.

ஒவ்வொருவரும் தம்முடைய பெருமையைச் சொல்லிக் கொள்வதுபோல நம் மாமுனிகளும் தம்முடைய பெருமையை ஆர்த்தி ப்ரபந்தத்தில் ஒரு பாசுரத்தில் அருளிச்செய்கிருர்:

தென்னரங்கர் சீரருளுக்கிலக்காகப்
பெற்ருேம்
திருவரங்கம் திருப்பதியே யிருப்பாகப்
பெற்ருேம்
மன்னியசீர் மாறன்கலை உணவாகப்
பெற்ருேம்
மதுரகவி சொற்படியே நிலையாகப்
பெற்ருேம்
முன்னவராம் நங்குரவர் மொழிகளுள்ளப்
பெற்ருேம்
முழுதுமவை நமக்குப் பொழுது
போக்காகப் பெற்ருேம்
பின்னையொன்றுதனில் நெஞ்சு பேராமற்
பெற்ருேம்
பிறர் மினுக்கம் பொருமையில்லாப்
பெருமையும் பெற்ருேமே.

இப்பாசுரத்தை ஒவ்வொரு ஸ்ரீவைஷ்ணவனும் தினமும் அனுஸந்திக்க வேண்டும்.

மாமுனிகள் சிஷ்யர்கள் "அஷ்டதிக்கஜங்கள்" என்மர்:

(1) வானமாமலை ஜீயர்
(2) பட்டர்பிரான் ஜீயர்
(3) திருவேங்கட ராமானுஜ ஜீயர்
(4) கோயில் அண்ணன்
(5) ப்ரதிவாதிபயங்கரம் அண்ணன்
(6) எறும்பியப்பா
(7) அப்பிள்ளை
(8) அப்பிள்ளார்

இவர்கள் தவிர அநேக சிஷ்யர்களும் உண்டு.

மாமுனிகள் அருளிச்செய்த க்ரந்தங்கள்:—

ஸ்ரீவசன பூஷணம், தத்வத்ரயம், முமுக்ஷுப்படி, ஆசார்ய ஹ்ருதயம்— இவற்றிக்கு வ்யாக்யானம்,

பெரியாழ்வார் திருமொழிக்கு லோபம் அடைந்த பகுதி மாத்திரம் உரை,

ராமானுஜ நூற்றந்தாதி உரை,
திருவாய்மொழி நூற்றந்தாதி,
உபதேசரத்தினமாலை,
ஆர்த்தி ப்ரபந்தம்,
யதிராஜ விம்சதி
தேவராஜமங்களம்.

"அடியார்கள் வாழ அரங்கநகர் வாழ
சடகோபன் தண்டமிழ் நூல் வாழ—கடல்
சூழ்ந்த
மன்னுலகம் வாழ—மணவாள மாமுனியே
இன்னமொரு நூற்ருண்டிரும்."

———